## மேயர் ஆர்.பிரியா – அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு பயனாளிகளுக்கு தீர்வுகளின் ஆவணங்கள் வழங்கினார்!





சென்னை, ஆக.20-

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும், அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 8 வார்டு-104 க்குட்பட்ட என்.வி.என். நகர் ஜவஹர்லால் நேரு 100 அடி சாலையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதியில் நேற்று (19.8.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்..13 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 130 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்..

ஆதார் இணைய சேவைகள் மனு 51 பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி -15 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 3 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 95 பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - - 86 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 3 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -4 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -798 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -341 என மொத்தமாக 1698 மனுக்கள் பெறப்பட்டு அதில் 1669 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் இந்நிகழ்வில் நிகழ்வில் மேயர் பிரியா ராஜன், அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின், சுதா தீனதயாளன் எம்.சி, கே.ராணி எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, வட்டக் கழகச் செயலாளர்கள் முருகேசன், லோகுபாபு மற்றும் 104வது வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில் ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் பிறந்த நாளையொட்டி கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். உடன் நாடாளுமன்ற கழகக் குழுப் பொருளாளர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் உள்ளார்.

## பட்டியலின மாணவர்களுக்கான

# உண்டு - உறைவிடப் பள்ளிகளில் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறதா?

### மக்களவையில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 20 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 12 ஆகஸ்ட் 2025 அன்று மக்களவையில், ஸ்ரேஸ்டா என்ற திட்டத்தின் கீழ் பட்டியலின மாணவர்களுக்கென ஒன்றிய அரசால் நடத்தப்படும் உண்டு, உறைவிடப் பள்ளிகளில் எவ்வளவு மாணவர்கள் பயின்று வருகிறார்கள்? என்றும், கடந்த நான்கு ஆண்டுகளில் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது? எவ்வளவு செலவிடப்பட்டது? என்றும் இடை நிற்றல் குறைந்துள்ளதா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா என்றும், ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

ஸ்ரேஸ்டா என்ற திட்டத்தின் முதல் நிலை தரவுகளின் படி, வருடத்திற்கு 3000 பட்டியலின மாணவர்களுக்கும், இரண்டாம் நிலை தரவுகளின்படி 13,500 மாணவர்களுக்கும், உண்டு உறைவிட பள்ளிகளில் அனுமதிக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும், கடந்த ஆண்டுகளில் 27 மாநிலங்களுக்கு ரூபாய் 276 கோடிகள் செலவில் 67000 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் என்றும், தமிழ் நாட்டிற்கென, பட்டியலின மாணவர்களுக்கு ரூபாய் 13 கோடிகள் செலவில் 1536 மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர் என்று, இணையமைச்சர் மக்களவையில் தெரி வித்தார்.

மேலும், அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் 99 சதவீதம் மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர் என்றும், இடை நிற்றல் மிகவும் குறைவாகவே உள்ளது என்றும், இத்திட்டத்தில் சேர்ந்து பயனடைய அனைத்து மாநில அரசுகளுக்கும், வழி காட்டு நெறிமுறைகளும், அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன என்றும்,

சமூக ஊடகங்களின் மூலமாகவும், அச்சு ஊடகங்களின் மூலமாகவும் பட்டியலின மாணவர்களுக்கென விழிப்புணர்வு முகாம்கள் அவ்வப்போது ஒன்றிய அரசால் நடத்தப்பட்டு வருகிறது என்றும், னுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, ஒன்றிய அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்று சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை இணையமைச்சர் ராம்தாஸ் அத்வாலே அவர்கள், மக்கள வையில் திமுக அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத் ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதில் அளித்துள்ளார்.

## நாட்டில் உள்ள 73,732 கல்வெட்டுகளில்

# 26,416 கல்வெட்டுகள் தமிழ் எழுத்துகளில் உள்ளன!

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஆக. 20 -

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்புத் தகடுகள் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளதா? என்று வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை (ASI) மற்றும் தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறையால் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட பண்டைய மன்னர்கள் / ஆட்சியாளர்களின் சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்புத் தகடுகள் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளதா? அப்படியானால், அவற்றின் விவரங்கள் மற்றும் தென்னிந்தியாவில் காணப்படும் மொத்த செப்புத் தகடுகளின் எண்ணிக்கை, அரசு வம்சாவளி வாரியாக தருக? அவை பாதுகாக்கப்படும் அருங்காட்சியகங்கள் யாவை?

தென்னிந்தியாவில் காணப்படும் 1.5 லட்சம் பழங்காலக் கல்வெட்டுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் கி.மு. 200 முதல் கி.பி. 1800 வரையிலான தமிழ் மொழியில் உள்ளன என்பது உண்மையா? அப்படியானால், வேலூர் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுகள் உட்பட அதன் விவரங்கள் தருக?

இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவு, சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் பல எபிகிராஃபிகா இண்டிகா தொகுதிகளையும் தென்னிந்திய கல்வெட்டுகள் தொடர்களாக வெளியிட்டுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் எபிகிராஃபிகா இண்டிகாவின் கடைசி தொகுதி மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகளை ASI வெளியிட்ட தேதி என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் சேகாவத் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

தமிழ்நாட்டில் இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் (ASI) கண்டுபிடித்த செப்புத் தகடு கல்வெட்டுகள் எதுவும் வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்படவில்லை.

இந்திய தொல்லியல் துறையால் நகலெடுக்கப்பட்ட மொத்த கல்வெட்டுகளின் எண்ணிக்கை சுமார் 73,732 ஆகும். அவற்றில் 26,416 தமிழ் எழுத்துக்களில் உள்ளன. வேலூர் மக்களவைத் தொகுதியில் காணப்படும் வரலாற்று கல்வெட்டுகள் உட்பட இந்தக் கல்வெட்டுகள், இந்திய கல்வெட்டு குறித்த வருடாந்திர அறிக்கைகளில் புரிந்து கொள்ள ப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய தொல்லியல் துறை எபிகிராஃபியா இண்டிகா மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகளின் பல தொகுதிகளை வெளியிட்டுள்ளது. எபிகிராஃபியா இண்டிகாவின் சமீபத்திய தொகுதி 2012-இல் வெளியிடப்பட்டது மற்றும் தென்னிந்திய கல்வெட்டுகள் 2025-இல் வெளியிடப்பட்டன.

தென்னிந்திய கல்வெட்டுகளின் 45 தொகுதிகளில், 18 தொகுதிகள் சுதந்தி ரத்திற்கு முன்பு வெளியிடப்பட்டன, மீதமுள்ள 27 தொகுதிகள் சுதந்திரத்திற் குப் பிறகு வெளியிடப்பட்டவை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் தாயார் –

# கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. மனைவி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் – அமைச்சர்கள் – கழக முன்னணியினர் அஞ்சலி!



சென்னை, ஆக.20-

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவியும் தொழில்துறை அமைச்சர், கழகத் தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அவர்களின் தாயாருமான ரேணுகாதேவி (வயது 79) நேற்று காலை இயற்கை யெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மறைந்த திருமதி ரேணுகாதேவி அவர்களின் உடல் மீது மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி மனைவியை இழந்து வாடும் டி.ஆர்.பாலு, தாயை இழந்து வாடும் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா ஆகியோருக்கு ஆறுதல் கூறினார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் மனைவி திருமதி ரேணுகா தேவி உடல் நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று காலை இயற்கையெய்தினார்.

அன்னாரது உடல் தியாகராயர் நகர், புது எண் 29, ராமன் தெருவிலுள்ள அவரது இல்லத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது.

மறைந்த திருமதி ரேணுகா தேவி அவர்களுக்கு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, செல்வா என்ற இரு புதல்வர்கள் உள்ளனர்.

திருமதி ரேணுகா தேவி மறைவுச் செய்தியறிந்ததும் அமைச்சர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் அன்னாரது இல்லம் சென்று அவரது உடலுக்கு மலரஞ்சலி செலுத்தி கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு அவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

## தி.மு.கழகப் பொருளாளர்

# டி.ஆர்.பாலு துணைவியார் திருமதி. ரேணுகாதேவி மறைவு!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி இரங்கல்!

புதுடெல்லி, ஆக. 20 -

தி.மு. கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகாதேவி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்த மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் டி.ஆர்.பாலு அவர்களிடம் தொலைபேசி யில் தொடர்பு கொண்டு அன்னாரின் துணைவியார் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.

## தி.மு.கழகப் பொருளாளர்

# டி.ஆர்.பாலு துணைவியார் திருமதி. ரேணுகாதேவி மறைவு!

### காங்கிரஸ் கட்சி அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இரங்கல்!

புதுடெல்லி, ஆக. 20 -

தி.மு. கழகப் பொருளாளரும் முன்னாள் ஒன்றிய அமைச்சரும் மக்களவைக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களின் துணைவியார் திருமதி ரேணுகாதேவி அவர்களின் மறைவுச் செய்தி அறிந்ததும், நேற்று (19.8.2025) காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் டி.ஆர்.பாலுவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அன்னாரின் துணைவியார் மறைவுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்.



திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, மங்களூர் ஒன்றியம், ஆவட்டி ஊராட்சியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.